
உ

சிவமயம்



யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும்
இலண்டன் இல்பேர்ட்டை வதிவிடமாகவும் கொண்ட
வர்த்தகர்

**திரு மாணிக்கம் சம்பந்தர் ராஜேந்திரன்( பிரான்சிஸ்)**

அவர்கள் இறைபதம் அடைந்தமை குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## திரு மாணிக்கம் சம்பந்தர் ராஜேந்திரன்( பிரான்சிஸ்)



தோற்றம்
12.01.1955

மறைவு
28.05.2008

## திதி வெண்பா

ஆண்டு சர்வதாரி அமைந்த வைகாசித்திங்கள்
பூண்ட அட்டமித் திதியதனில் - மாண்புமிகு
மாணிக்கம் மைந்தன் ராஜேந்திரன் ஐயன்
தான்சேரந்தான் ஈசன் கழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## தேவாரம்

தொண்ட ரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டு பாட மயிலாட மான் கன்று துள்ள வரிக்
கெண்டை பாய சுனை நீல மொட்டலரும் கேதாரமே.

## திருவாசகம்

தினைத்தனை யுள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப் புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ

## திருவிசைப்பா

அற்புதத் தெய்வ மிதனின் மற்றுண்டோ
அன்பொடு தன்னை அஞ்செழுத்துன்
சொற்பதத்தில் வைத்துள்ள மள்ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மாளிகையும்
பவள வாயவர் பனைமுலையும்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழழவுற உளறி உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறிவும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேச குமரேசா
கறையானைக் கிழையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை இரும்பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு பிரான்சிஸ் ராஜேந்திரன் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

திரு திருமதி பிரான்சிஸ் தம்பதிகளின் பதினொரு பிள்ளைகளில் ஏழாவது பிள்ளையாக பிரான்சிஸ் ராஜேந்திரன் பிறந்தார். பெற்றோர் அவருக்கு இராஜேந்திரன் என்று பெயரிட்டனர். ஆனால் அவருக்கு முன்பு பிறந்த அவரது சகோதரரினால் தம்பி என்று அழைக்கப்பட்டதனால் அவருக்குப் பின் பிறந்தவர்களி னாலும் அவர் தம்பி என்று அழைக்கப்பட்டார். பின்பு பெற்றோராலும் தம்பி என்று அழைக்கப்பட்டு இறுதியில் எல்லோராலும் தம்பி என்று அழைக்கப்பட்டார்.

தம்பி, இளமைக்காலத்தில் கல்வியில் பெரிதும் நாட்டமில்லாது இருந்தார். தான் கல்லூரியில் படிக்கும் நாட்களில் பெற்றோருக்குப் பெரிதும் ஒத்தாசையாக இருந்தார். கடவுள் அவருக்குக் கொடுத்த அழகிய சிரிப்பினாலே எல்லோரையும் தனது நண்பர்களாக மாற்றும் இயல்பு கொண்டவர். இலங்கையின் இனப்பிரச்சனை காரணமாக இருபது வருடங்களுக்கு முன் இலண்டன் வந்தார். இங்கு வந்த பின்னர் தன் அழகிய சிரிப்பின் மூலம் அனேக நண்பர்களைச் சம்பாதித்துக்கொண்டார்.

பின் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளின் தந்தையானார். தன் பிள்ளைகளின் கல்வியில் பேரார்வம் செலுத்தினார். பிள்ளைகளும் தந்தையின் உற்சாகத்தில் கல்வியில் சிறந்து வந்தனர்.

தம்பி, தன் மனைவியின் இரு தம்பிகளின் கல்வி உயர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டார். அவர்களின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார். அவர்கள் தமது மைத்துனர் செய்த உதவிக்காக என்றென்றும் நன்றியாக இருப்பர். இன்று தம்பி, நம் எல்லோரையும் தனது இறப்பினால் அழ வைத்துவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEATH

Viewed from a scientific perspective, a person is considered to be alive when he is able to respond to certain stimuli that he receives through the sense organs. When an organism or individual stops responding to the stimuli, we say he/she is dead. Who exactly is dead? We see that the body is still there; no part of it has gone away. The same body is lying there which was there before death. Yet, when we say Mr. X has died, what we really mean is that the mind & intellect which were receiving & responding to the outer stimuli have left the body. The mind & intellect are expressions of thoughts in two different functions: feeling & thinking respectively. Hence we conclude that Mr. X the person who calls himself 'I' or 'ME' is other than the body. Though the physical body is still there, the mind & intellect have left it. That is why we use the term 'Dead & gone'. 'Dead' denotes the status of the body, while 'gone' signifies the status of the mind and the intellect. Therefore I must conclude that I am the possessor or the indweller of the body.

When the subtle body, that is, the mind and the intellect takes the pilgrimage from a given physical body to another, we say that the person has died. Yet, each will continue to go on to such bodies as controlled by their desires, demands, or cravings. We remain in a certain place until our particular demands are met, and afterwards we leave that place and go to another where our next predominant desires are to be fulfilled. Change of workplace from one place to another often entitles a shift of residence also.

Now the question is: Can the mind & intellect remain without the body? Let us take the example of


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

relationship of 'the bullet and the gun'. A bullet or a gun alone cannot frighten or kill us because by themselves they do not have any power. But when the bullet is in the gun, it can certainly frighten us. And when fired from the gun it can cause death. A bullet can only travel in the direction in which the gun is pointed. As long as the bullet is in the gun, the gun has control over the direction in which the bullet will travel. Once the bullet is shot or has left the gun, the gun has no control over it. Similarly, while our mind is in the body we have control over the mind. But once the 'mind-intellect' has left the body, the body has no control over it. The mind will be shot in the direction decided by the sum total of our thoughts and activities of our entire life time.

We could say that the relationship of the mind & intellect with the body is something like that of a bird with its nest. The nest is safe as long as it is needed. Once its purpose is over, the bird flies away, never thinking about the nest. And without the bird, the nest perishes. There is no sense of possession of ownership in this. Similarly, until the subtle body, mind-intellect, exhausts its desires, and likes and dislikes, the physical body is safe. When the purpose of the subtle body is exhausted, it leaves its physical frame. Without the subtle body, the physical body must perish. But actually we have not perished, for we are something other than the body...!

Of all the experiences, the sweetest is that of sleep. There is nothing sweeter than the sleep. Death is just like going off to sleep. And Tennyson who was gifted with deeper insight, tells us, in his 'In Memoriam' that Sleep is death's twin-brother. Therefore death is sweet as going off to sleep. Why, then, must we fear death?...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lankan Media Services SMS

We were very sorry to hear of MrFrancis Rajendran's death. Apart from being a family man he was a great believer in the Tamil cause. His Brother–in- Law Nakkeeran Arasaratnam has been working on a project to help further the cause by helping found a press/media operation called the Sri Lankan Media Service (SMS).

The role of the Sri Lankan Media Services is to feed the British media with positive stories concerning Tamils and the cause and to counter-balance the Sri Lankan Government's (GOSL) propaganda. Ultimately it aims to influence the British public and institutions to adopt a favourable position towards Tamil Eelam.

'World' opinion did not come out in favour of the people of Tibet by accident. It took years of media promotion for their cause by, for example, the Dai Lama and supporting westerners for 'world' opinion to take sides. The Tamil cause is no different.

In memory of MrFrancis Rajendran, Nakkeeran is dedicated to promoting the SMS as the best way forward for the Tamil cause. If you agree with us please forward a donation in the box below and/or speak to Nakkeeran if you can help regularly. All donations will be used to purchase equipment and stationary etc.

-----------------------------------------------------------------------------------

Yes I would like to donate to the Tamil cause and enclose £ _________
(Cheques made out to Accentuate **Public Relations Company**)

Yes I would like to help out in any way possible (tick box)

NAME........................................ADDRESS........................................

........................................P/C..................Ph/no...............
Emai:l................................

SMS, PO BOX 4351, HORNCHURCH, ESSEX RM12 9AL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

அன்புக்கும், பண்புக்கும் இலக்கணமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கண்ணை இமை காப்பது போல் எமைக்காத்த எம் அன்புக்கினிய குலதெய்வம்

**திரு மாணிக்கம் சம்பந்தர் ராஜேந்திரன் (பிரான்சிஸ்)**

அவரின் மறைவுச் செய்தி கேட்டவுடன் நேரில் வந்து ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உள்ளூர், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பின் இறுதிக்கிரியைகளின் போது கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவியும், ஒத்தாசை யுமாக இருந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இம்மலரை சிறப்பாக அச்சிட்டு உதவியவருக்கும், எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
மனைவி
பிள்ளைகள்
உறவினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி


ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய -
அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய்
- அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் -
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே
- ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா
- ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed by **JR PRINT** Tel: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org